எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

4 பெப்ரவரி 2018

பொது காலம் 5ம் ஞாயிறு

# உடல் நலத்தில் நம்பிக்கை



இயேசு தமது பணி காலத்தின் போது பல அற்புதங்களைச் செய்தார் என நற்செய்தி புத்தகங்கள் கூறுகின்றன. ஆனால் அந்த அற்புதங்களின் செய்தி பலமுறை அவ்வளவாக தெளிவுப்படுத்தப்படவில்லை அல்லது தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இருப்பினும் தமது பரிவன்போடு அவதிப்படும் பலரை அணுகி, அவர்களின் நோய்களையும் துயரங்களையும் போக்கினார் இயேசு. அவர்கள் விரும்பும் உடல் சுகத்தை வழங்குவதே அவரது நோக்கம். அவர்களின் உடல் நலம் பெறுவது, புத்துயிர் பெறும் அவர்களின் விசுவாசம் இயேசுவிடம் அவர்களை இட்டுச் சென்றன. அவர்கள் உடல் வலிமை பெறும் அவர்கள், தங்களது ஆன்ம சுகத்தையும் நாடுவார்கள் என இயேசு எண்ணினார். காய்ச்சலிருந்து குணம் பெற்றதும் சிமோன் மாமியார் துள்ளி எழுந்து ஆண்டவருக்கு பணிவிடை செய்தார் என்பதை இன்றைய நற்செய்தி வாசகத்தில் பார்க்கிறோம். கிறிஸ்துவின் சித்தத்திற்கு தங்களையே அர்ப்பணிக்கும் மனப்பான்மையை இயேசுவால் தொடப்பட்டவர்களிடம் இருந்தது. அவர் செய்த அற்புதங்கள் இறைவல்லமையைக் காட்டுவதால் அதிகமான மக்கள் கூட்டம் அவரைத் தேடி செல்வதாக நற்செய்தி வாசகம் மேலும் கூறுகிறது.

எருசலமிற்கு தமது இறுதிப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன், உச்சமாக லாசர் உயிர்த்தெழுதலின் அற்புதத்தை நாம் கேட்கும் போது, நமது மனம் அவற்றை மெத்தனமாக நினைத்து விடக்கூடாது. இவை வெறும் கதைகள் அல்ல. இதற்கு முன் பலமுறை நாம் கேட்டிருப்பதால் அவற்றின் வல்லமையை சாதாரணமாக எண்ணி விடக்கூடாது. உடலால் அதனை அனுபவத்தவர்களின் நம்பிக்கை, நமது துயரத்தைப் போக்கவும் வேதனையை நீக்கவும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கை, வாழ்நாள் எல்லாம் மனித இனத்திற்கு கடவுளின் வல்லமைக்கு சாட்சியம் பகரும் மனஉறுதி, நமது ஊன் உடல் இறுதியாக நலிவடைந்தது மறுவாழ்வுக்கு கிறிஸ்துவால் உருமாற்றம் பெறும் விசுவாசம் நம் அனைவருக்கும் ஊக்கமளிக்கிறது.

கப்பர்நாகூம்மில் நிகழ்ந்த அற்புதத்திலிருந்து செபத்திற்கான மனநிலையை அறிந்து கொள்ளலாம். முதலாவதாக, தெய்வீக உதவியை கேட்கும் முன்னர் விசுவாசம் இருக்க வேண்டும். உங்கள் விருப்பத்தை கடவுள் கொடுப்பது விசுவாசமல்ல; ஆனால், அவரது அன்பில் இன்னும் ஆழமாக உறவு கொள்ள இட்டுச் செல்லும் தேவையானதை எப்போதும் அவர் நிறைவேற்றுவார். இரண்டாவது, நல்லதோ கெட்டதோ வாழ்க்கையின் எல்லா சூழ்நிலையிலும் நம்பிக்கை தரும் கடவுளுக்கு எப்போதும் செபத்தில் நன்றி கூற வேண்டும்.

இதனால் உலகைச் சார்ந்த நமது வாழ்க்கையை அவரோடு நித்திய வாழ்வுக்கு இட்டுச் செல்லும். மூன்றாவதாக, உங்கள் செபங்களுக்கு கடவுள் எவ்வாறு பதில் அளிக்கிறார்? நமது விண்ணப்பங்களுக்கு அவர் அளிக்கும் மறுமொழி சில வேளையில் நமது விருப்பமாக இருக்காது. ஆனால் நமது மீட்புக்கு தேவையானதாக இருக்கும். இறுதியாக, எல்லாவற்றிலும் முதன்மையாக நமது ஆன்ம நலத்தை நாட வேண்டும். இந்த உலகத்தின் பல கவலைகளை குறித்து இயேசு நமக்கு கற்பித்திருக்கிறார். “எதை உண்பது” அல்லது “எதை குடிப்பது” அல்லது “எதை உடுத்துவது” என்பது பற்றி கவலைப்பட வேண்டாம் என கூறியிருக்கிறார். புறவினத்தாரே இவற்றையெல்லாம் நாடுவார்கள். பரலோகத் தந்தைக்கு உங்களின் தேவைகள் அனைத்தும் தெரியும். ஆயினும், முதலில் அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள், அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும். †

INTERNAL CIRCULATION ONLY

BUL 05/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

கடந்த சில ஞாயிற்றுக்கிழமை வாசகங்களில், புனித மாற்கு நற்செய்தியில் நமதாண்டவர் நிகழ்த்திய அற்புதங்களை நாம் படித்து வருகிறோம். அவதியுறும் மனிதர்கள் மீது இயேசு காட்டும் பரிவன்பை நாம் காண்கிறோம். அவர்கள் தங்களது நோய்களிலிருந்து குணம் பெற வேண்டுமென அவர் விரும்புகிறார். இவை அனைத்தும் மீட்பின் பணிக்கு இட்டுச் செல்கிறது என்பதை அவரது போதனைகள், அற்புதங்கள் வழி நாம் காணலாம். அவர்களுக்கு உடல் சுகத்தைத் தருவது மட்டும் அவரது எண்ணமல்ல, பாவ அடிமைத்தனத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் அவர்களுக்கு வாழ்வளிப்பதே அவர்களின் நோக்கம்.

இதனைக் காண்பதற்கு, மனுக்குலத்தின் வேதனையை ஆழ்ந்து அறிந்திருக்க வேண்டும். இதனால் அவர்களின் வேதனையைப் போக்குவதோடு அல்லாமல், அந்த வேதனையை தமது உடலில் தாங்கி கொள்ள சித்தமானார், இயேசு. இந்த பரிவன்பே, ஒவ்வொரு அற்புதங்களிலும் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த பேரன்பின் காரணமாகவே பிறருக்காகவும் நமக்காகவும் பாடுபட்டு மரித்தார். ஆயினும் இந்த மீட்பளிக்கும் அன்பு வெளிப்படுவதற்கு, குறித்த காலம் வரை அவரது உண்மையான பணியின் நோக்கம் மறைக்கப்பட்டிருந்தது. இந்த காரணத்திற்காகவே, அற்புதங்கள் நிகழும் போது அதனை யாரிடமும் சொல்ல வேண்டாம் என இயேசு கூறுவதை நற்செய்தியில் படிக்கிறோம். “வெளிப்படுத்தப்படாமல் மறைபொருளாய் இருக்கும் இறைஞானத்தை பற்றியே நாங்கள் பேசுகிறோம். அது நாம் மேன்மை பெற வேண்டும் என்னும் நோக்குடன் உலகம் தோன்றும் முன்பே கடவுளின் திட்டத்தில் இருந்தது. இவ்வுலகத் தலைவர்கள் எவரும் அதை அறிந்து கொள்ளவில்லை. அறிந்திருந்தால் அவரக்ள மாட்சிக்குரிய ஆண்டவரைச் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்கள்” என புனித பவுல் விளக்குகிறார் (1கொரி. 2:7-8).

அசுத்த ஆவி முதல் பிணிகள் வரை குணமடைந்தவர்களிடமும், தமது அன்புச்சீடர்களிடமும் அனைவரிடமும் தம்மை யாரிடமும் சொல்ல வேண்டாம் என உவமையிலும் நேரடியாகவும் இயேசு கூறி வந்தார். அவரது மரணத்திற்கு பின்னரே, ‘மீட்பின் ரகசியம்’ அவரது உயிர்தெழுதல் வழி பிறிட்டு வெளிப்பட்டது. அவரது போதனை மற்றும் அற்புதங்களின் நோக்கம் அனைத்தும் அறியப்பட்டது. சிலுவையும் உயிர்ப்புமின்றி, இயேசு செய்த பணியை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. ஆகவே சிலுவையில் அவரைப் பின்தொடரா விட்டால், கிறிஸ்துவின் உண்மையான சீடர்கள் என நம்மை கூறிக்கொள்ள முடியாது.

தவக்காலத்தைத் தொடங்குவதற்கு முன், இன்றைய நற்செய்தியில் வரும் அற்புதம் கடைசியானது. அற்புதங்களை நாடி இயேசுவைச் சுற்றி வரும் கூட்டத்தைக் கண்டு மலைத்து விட வேண்டாம் என நமக்கு நினைவுறுத்தப்படுகிறது. குருத்தோலை தாங்கி மன்னரைப் போல் வரவேற்ற மக்கள் கூட்டம், பின்னர் சில நாள்கள் கழித்து, ‘சிலுவையில் அறையும்’ என கூச்சலிட்டதும் இதே கூட்டம்தான். மலைத்துப் போகும் நிலைக்கு அப்பால் நம்பிக்கை கொள்ள வேண்டுமென நமக்கு நினைவுறுத்தப்படுகிறது. நல்ல காலத்தில் எல்லாம் நன்றாக இருக்கும் போது புது தெம்புடன் இருக்கும் கிறிஸ்துவர்கள், ஆன்மீகக் கேடு கொண்ட பொல்லாத காலத்தின் போது கிடைப்பதை விட அதிகம் கொடுக்க வேண்டி வரும். அற்புதங்கள் நிகழும் போது இருந்த கூட்டம், சிலுவையின் போதும் இருந்திருந்தால், மானிட மகன் தனிமரமாக இருந்திருக்க மாட்டார்.

தவக்காலத்தில் காலடி எடுத்து வைக்க நாம் தயாராகும் வேளையில் வருங்காலத்திற்கு நமது நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்வோம். பிறரின் மீட்புக்காக தன்னையே மறுத்து சிலுவைக்குக் கொண்டு செல்லும் பயணமே தவக்காலம். நமக்கு அருளப்பட்ட அந்த நம்பிக்கையை கைவிடாமல் இறுக்கப் பிடித்துக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவே, நித்திய வார்த்தை, உயிருள்ள கடவுளின் மகன் என்ற மீட்பின் ரகசியம் வெளிப்படுத்தப்பட்ட குறித்த காலத்தில் நாம் வாழ்கிறோம். சிலுவைக்கு அப்பால் கல்லறை உண்டு, அங்கியிருந்து, இயேசுவின் பெயரில் நம்பிக்கை கொண்டு மரித்த அனைவருக்கும் வாழ்வளிக்க, இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தெழுந்தார். ✝

**INTERNAL CIRCULATION ONLY**
BUL 06/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

11 பெப்ரவரி 2018
பொது காலம் 6ம் ஞாயிறு



# மலைப்புக்கு அப்பால் நம்பிக்கை

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

18 பெப்ரவரி 2018
தவக்காலம் 1ம் ஞாயிறு

Newbec
NEW WAY OF BEING CHURCH



# மீட்பளிப்பவரிடம் திரும்பி செல்வதே நம்பிக்கை

ஒத்தமை நற்செய்தி புத்தகங்களில் பாலைநிலத்தில் கிறிஸ்துவின் சோதனை பற்றி புனித மாற்கு எழுதிய வாசகம் மிகவும் குறுகியது. ஆனால் மீட்பரின் வாழ்வின் இந்த முக்கியமான நிகழ்வின் சாரமும் மகத்துவமும் குறையவில்லை. மனந்திரும்பி விசுவாசம் கொள் என்ற அறைகூவலுடன், தம்மை சோதிக்க வந்தவரிடமிருந்து இயேசு கடந்து செல்கிறார். சாத்தானின் சூழ்ச்சியையும் தந்திரத்தையும் முறியடித்த மனிதனான பாலநிலத்திலிருந்து அவர் வெளியேறுகிறார். இது, நமது காலம் வரை எதிரொலிக்கும் செய்தியாக இருந்து வருகிறது. குறைக்கூறும் அல்லது குற்றஞ்சாட்டும் செய்தி அல்ல, மாறாக முறியடிக்கப்பட்ட சாத்தானுக்கும் அதன் தீயத் தந்திர சூழ்ச்சிக்கும் அனுதாபம் தெரிவிக்கும் செய்தி. ஏனெனில் அவற்றின் சதுரியமான தந்திரங்களை ஆண்டவரே அறிவார்.

பாலைநிலத்திலிருந்து அவர் வருவது, நமக்கு தீர்ப்பளிக்க அல்ல மாறாக மீட்பு அளிக்க. தவக்காலத்தில் அவரது அழைப்பு, தவக்காலத்திற்கு மட்டுமல்ல, நமது வாழ்நாள் முழுவதும் விடுக்கப்படும் அழைப்பு: மனந்திரும்பி, பாவத்திலிருந்தும் சாவிலிருந்தும் மீட்பு அளிக்கும் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

என்னிடம் திரும்பி வாருங்கள், மீட்பு பெறுவீர்கள் – என்பதே ஆண்டவர் இன்று விடுக்கும் செய்தி. அது அவ்வளவு எளிதானது. நாம் ஒவ்வொருவரின் பாவத்தையும் அவர் அறிவார், அதனை அவர் கணக்கில் வைத்துக் கொள்ள மாட்டார். நம்முடைய ஒவ்வொரு பாவத்தையும் பட்டியலிடுவதில்லை. நீங்கள் இருப்பது போல் வாருங்கள்; உங்கள் பாவங்களுக்கான தண்டனையை ஏற்கனவே நாம் சுமந்து கொண்டேன். கடவுளின் அன்பைப் பெற நமது பாவம் அனைத்தையும் விட்டொழிப்பதே உண்மையான விசுவாசத்தின் தன்மை. இது எவ்வளவு நேர்த்தியானது. நம்முடைய ஒவ்வொரு பாவச்செயலுக்கும் தீர்ப்பளிக்கப்பட்டு வேதனையை அனுபவிக்க வேண்டும். ஆனால் ஆண்டவரோ நிபந்தனையற்ற மன்னிப்பை சமாதானத்தையும் வழங்குகிறார்.

நாம் மனந்திரும்பி, விசுவசத்தால், நமதாண்டவர் இதயத்திலிருந்து இலவசமாக கிடைக்கும் இரக்கத்தை நாம் ஏற்றுக்கொண்டிருந்தால், நம்மைச் சுற்றியுள்ள உலகில் கிறிஸ்துவை நாம் பார்த்திருந்தால், சாத்தானின் தந்திரத்தை முறியடிக்க நமது வலிமையை அவரிடமிருந்து பெற்றிருப்போம்.

தவக்காலத்தில் நாம் மேற்கொள்ளும் விரதம், நமது பாவத்திற்குத் தண்டனை அல்ல, மாறாக கடவுள் மீதான நமது மனத்துணிவை வலுப்படுத்தும் ஆயுதம். கடந்த காலத்தில் நாம் செய்த காரியத்திற்கு ஈடுகட்டுவதல்ல தவம்; மாறாக தீயில் தங்கம் புடம் போடப்படுவது போல, விசுவாசத்தில் உறுதிப்படவே. தங்களது பாவச் சுமைக்கு, எங்கே தண்டனை தீர்ப்பைக் கிடைத்து விடுமோ என எண்ணி பலர் கிறிஸ்துவிடமிருந்தும் திருச்சபையிடமிருந்தும் ஒதுங்கி இருக்கின்றனர். இந்த காலம் வழங்கும் நம்பிக்கையை துய்த்துணரஅவர்கள் தவறி விடுகின்றனர். இன்றும் என்றும் இயேசு இந்த நம்பிக்கையை வழங்குகிறார். சாத்தானைச் சந்தித்து வெற்றிவாகை சூட்டிய இயேசு, சாத்தானின் சக்தியையும் மனித பலவீனத்தையும் அறிவார். நம்மை கண்டிப்பதற்காக அவர் மனமாறச் சொல்லவில்லை. பாலைநிலத்திலிருந்து வெளியேறும் வழியைக் கற்பிப்பதற்காக இயேசு நம்மை மனமாற அழைக்கிறார்.

'ஆண்டவர் கூறுகிறார், தீயோர் சாக வேண்டுமென்பது என் விருப்பம் அன்று; அத்தீயோர் தம் வழிகளினின்று திரும்பி, வாழ வேண்டும் என்பதே என் விருப்பம்' (எசே. 33:11) என்ற தவக்கால மதியம் செபத்தில் நாம் பாடுகிறோம். எனவே, ஆண்டவரை நோக்கி, தவச்செயல்களால் நொருங்கிய உள்ளத்தோடும் இரக்கம் கொண்ட இதயத்தோடும் நாமும் திரும்புவோம். அவரே, உலகம் எனும் பாலைநிலத்திலிருந்து நித்திய வாழ்விற்கு வழிகாட்டி நம்மை அழைத்துச் செல்வார். ✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 07/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட்டு மாதம் 6ம் தேதி ஆண்டவரின் உருமாற்ற விழாவைக் கொண்டினாலும், முப்பெரும் பாஸ்கா விழாக் கொண்டாட்டத்திற்கான தவக்கால தயாரிப்பாக ஆண்டவரின் உருமாற்ற மறைபொருள் மீண்டும் கூறப்படுகிறது. கிறிஸ்துவின் பணியில் அது முக்கியமான நிகழ்வைக் குறிப்பதாலும், சிலுவைப்பாதையில் கிறிஸ்துவுடன் செல்ல விரும்புபவர்களுக்கு நம்பிக்கையைத் தருவதாலும் தவக்காலத்தில் ஆண்டவரின் உருமாற்றம் இடம் பெறுகிறது.

'நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?' என்ற கிறிஸ்துவின் கேள்விக்கு பேதுரு அளிக்கும் பதிலை அடுத்து, எல்லா மூன்று ஒத்தமை நற்செய்தி புத்தகங்களிலும் ஆண்டவர் உருமாற்றம் இடம் பெறுகிறது. 'நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்' என பேதுரு உரைத்தப் பதில், சீடர்களுக்கும் இயேசுவிற்கும் இடையிலான உறவில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. நான் ஒரு 'போதகர்' அல்லது 'தலைவர்' எனக் கூறுவதை இயேசு நிறுத்திக் கொண்டார். எதிர்பார்க்கப்படும் மெசியா, கடவுளால் ஆசிக்கப்பட்டவர் என பழைய ஏற்பாட்டில் முன்னுரைத்தது போல இறைமக்கள், இஸ்ராயேலை மீட்க வருபவர் அவரே என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். ஆனால், தமது முழு தன்மையையும் கிறிஸ்துவின் எதிர்பார்ப்பையும் அவர்கள் முழுமையாக அறிந்தவர்கள் இல்லை என்பது இயேசுவிற்குத் தெரியும்.

இதனை அடுத்தே, இயேசு தமது மரணம் குறித்தும், மீட்பின் அர்த்தம் குறித்தும் மெசியா பற்றிய உலகக் கருத்திற்கு மாறான உண்மையான அர்த்தம் அல்லது ரகசியம் குறித்தும் தமது சீடர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இயேசு ஒரு சாதாரண மனிதனல்ல, சாதாரண 'கடவுள் மகன்' அல்ல, இயேசு அவரே கடவுள், அவரை அனுப்பி தந்தைக்குச் சமமானவர் என்ற உண்மை வெளிபாடுகள் தெளிவானது, ஆண்டவர் உருமாற்றத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. பாவத்தின் சம்பளம் மரணம் என்ற மனித அடிமைத்தனத்தை தமது மரணத்தால் போக்க வந்த, இறைமைந்தன், நித்திய மாட்சிமையின் அரசுக்கு விசுவாசத்தோடு அவரைப் பின்பற்றும் அனைவருக்கும் மரணத்தின் வழி வாழ்வளித்தவர். அவரது சீடர்கள் இவற்றை எல்லாம் அறிந்து கொள்ள முடியவில்லை. மரண வாசலுக்கு இயேசு இழுத்துச் செல்லும் வரை அவர்கள் இதனைப் புரிந்து கொள்ளவில்லை. ஈஸதர் ஞாயிற்றுக்கிழமையன்று அவர்களில் பெண் ஒருத்தி, கல்லறை காலியான அதிர்ச்சிச் செய்தியை விரைந்து கொண்டு வந்த போது அவர்களுக்குப் புரியவில்லை. '...அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சிமையைப் பெற்றிருக்கிறார்' (யோவான் 1:14) என இதே சீடர்கள் நமக்குச் சாட்சியம் பின்னர் சாட்சியம் பகர்ந்துள்ளனர். அவர்கள் புரிந்து கொண்டனர் என்பதற்கு மெசியா ரகசியம் பற்றிய அவர்களின் அறிக்கையே சாட்சி. கிறிஸ்து வழங்கும் மீட்பு குறித்து நாம் ஐயம் கொள்ளக்கூடாது என்பதற்காக நம்மிடையே அவர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

ஞானம் பெற்றவர்களின் கண்கள் வழி காண்பதற்கு நாம் பேறு பெற்றவர்கள். 'என் அன்பார்ந்த மைந்தர் இவரே' (மாற்கு 9:7) என நாம் ஒவ்வொருவரிடமும் தந்தையின் குரல் ஒலிக்கிறது. ஆண்டவர் உருமாற்றம் நிகழ்நத இரவில் அவரது மாட்சிமை வெளிப்படுத்தப்பட்டது. எருசலத்தின் மரணப் பாதையில் கிறிஸ்துவின் குரலுக்கு செவி கொடுக்கா விட்டால், ஈஸ்தர் மகிழ்ச்சியை உணருவது சற்று சிரமமே. தவக்காலம் இல்லாமல் ஈஸ்தர் இல்லை, அதே போல், இயேசு உருமாறிய மலையை அல்லாமல் கொல்கோத்தா மலையில் ஈஸ்தரன்று கிடைத்த கிறிஸ்துவின் வெற்றியை மறந்து விடுவதும், எளிதல்ல.

தவக்காலத்தில் நாம் பயணம் செய்யும் போது, நமது அன்றாட சிலுவையைத் தூக்கிக் கொண்டு, அவரது சீடர்களுடன் சாட்சியம் பகர, கிறிஸ்துவின் போதனையை செவிமெடுப்போம். கிறிஸ்து பகிர்ந்து கொண்ட மாட்சிமைக்கு விலை கொடுக்க வேண்டியிருந்தது. இந்த வாழ்வில் சிலுவையைச் சுமக்கும் வேளையில் நமது ஆன்மாவிற்கு உருமாற்ற நிகழ்வு உறுதியளித்தது, அவரது மாட்சிமையின் லட்சியம் நமது ஊக்கமின்மைக்கு மருந்தாக அமையட்டும். கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு கொள்வது, நமக்காகவும் அவரை நாடுவோருக்காகவும் வழங்கிய மீட்புப் பணியில் பங்கு கொள்வதாகும். திருதந்தை பெரிய சிங்கராயர் கூறியது:

'பாடுகளின்றி மாட்சிமையின் அரசு இல்லை என்பதால், வாழ்க்கையின் போராட்டத்தில் பொறுமை காத்து, மகிழ்ச்சியின் வாக்குறுதியில் நம்பிக்கை கொள்வதில், ஆண்டவரின் முன்மாதிரியைப் பின்பற்றுமாறு விசுவாசிகள் அழைக்கப்படுகின்றனர்' ✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 08/2018
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

25 பெப்ரவரி 2018
தவக்காலம் 2ம் ஞாயிறு

# Newbec

NEW WAY OF BEING CHURCH



# நம்பிக்கை தரும் குரலுக்கு செவிகொடு